**Cross Examination, Dated: 24/09/2021**

ஒ.எஸ்.எண்.69/2018, PW-1, திரு. ரஹ்மத்துல்லா, த/பெ. சர்புதீன் ராவுத்தர், சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி எனது அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 10.09.2018ம் தேதியிட்டு பிரதிவாதி பதிலறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் அவர் எனது வக்கீலுக்கு அனுப்பியுள்ளார். அது வா.சா.ஆ.4 என்றால் சரிதான். 05.09.2018 தேதிய அறிவிப்பு நான் ஆவணங்களை உற்பத்தி செய்து பிரதிவாதி என்மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக முன்யோசனை செய்து முன் தேதியிட்டு கொடுக்கப்பட்ட அறிவிப்பு என்றால் சரியல்ல. 30.07.2017ம் தேதியில் பிரதிவாதி எனக்கு எதிராக மாவட்ட கண்காணிப்பாளரிடம் நான் சீட்டு பணம் தரவில்லை என்றும் அதேபோல் பிரதிவாதிக்கு சொந்தமான காரை வாடகைக்கு எடுத்து சென்றுவிட்டு எனது மைத்துனர் வாடகை தரவில்லை என்றும், நான் புதுக்கோட்டை ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா காசோலைகளை பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டேன் என்றும், 24 புரோநோட்டுக்கள், 5 வெற்றுத்தாள்கள், திருமயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.805/2012, 2261/2013 ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்ததாக புகார் கொடுத்திருந்தார் என்றால் ஆம். நான் மேற்படி விசாரணையில் வழக்கு நிலுவையில் இருப்பதாக சொல்லி குற்ற வழக்கிலிருந்து தப்பித்து தற்போது வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. ஆகையினால் நான் 05.09.2012 தேதியில் கொடுத்த வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில் 7 தினங்களுக்குள் அசல் மற்றும் வட்டியை செலுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டு இரண்டு நாட்களுக்குள் வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. இதன் மூலம் அவர் பதிலறிவிப்பு கொடுக்கும் வாய்ப்பை சட்ட விரோதமாக உட்கருத்துடன் மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு பிரதிவாதியின் பதிலறிவிப்பை மறைத்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ஐ பூர்த்தி செய்தவர் பிரதிவாதியுடன் வந்த மாணிக்கம் என்பவர். அதில் சாட்சியாக திருநாவுக்கரசு மற்றும் அஜ்மல் அலி சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளார்கள். பிரதிவாதி வா.சா.ஆ.1ல் ஸ்டாம்பின் மீதும் அதற்கு கீழும் இரண்டு கையெழுத்துக்கள் போடப்பட்டுள்ளது என்றாலும் அவை உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல்

அஜ்மல் அலி மற்றும் திருநாவுக்கரசு சாட்சிகளாக இருக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கூட்டிவந்த மாணிக்கம் என்பவர் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே பிரதிவாதியிடமிருந்து பெற்ற கடனுறுதி சீட்டிலிருந்த கையெழுத்துக்களை நான் வா.சா.ஆ.1ல் உற்பத்தில் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமான ட்டி.என்.55-பி-9464 தோஸ்து என்ற வாகனத்தை என் மைத்துனர் ஆரிப்கான் பிரதிவாதியிடமிருந்து வாடகைக்கு பெற்றார் என்றால் சரியல்ல. விலைக்கு விற்றார். அந்த காரை விலைக்கு பேசி ரூ.2,50,000/- பிரதிவாதிக்கு அட்வான்ஸாக கொடுத்துவிட்டார்கள். மொத்தம் பேசப்பட்ட ரூ.6,75,000/-த்தில் மீத தொகையை பிரதிவாதி வண்டிக்காக பெறப்பட்ட வங்கி கடனை தீர்த்துவிட்டால் மீதி பணத்தை கொடுத்துவிட வேண்டும் என்று பேசிக்கொண்டார்கள். இது சம்மந்தமாக ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் பிரதிவாதிக்கும் ஆரிப் க்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன். அந்த ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். ஆனால் அந்த ஒப்பந்தத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. மூன்று மாதத்தில் வங்கி கணக்கை தீர்க்காததால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அவரிடம் பலமுறை போனில் கேட்கப்பட்டது. நான்தான் பிரதிவாதியிடமிருந்து ஆரிப்கானுக்கு வாகனத்தை கொடுக்காததால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் இல்லை. என்னுடைய வாகனத்தை எடுத்துக்கொண்டு வாடகை கொடுக்கவில்லை என்று காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். வாகனத்தை பிரதிவாதி பிடுங்கிகொண்டு போனதாக என்னுடைய மைத்துனர் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகார் பொய் புகார் என்பதால் தான் சம்பவ நாளாக ஒரு நாளை சொல்லிவிட்டு பல நாள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் சீட்டு பணத்தை மோசடி செய்வதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.